தமிழ்நாடு. புதுச்சேரி

ஜெர்னலிஸ்ட் வாய்ஸ்

செப்டம்பர் 2026 விலை ரூ.20/-
September 2026 Price Rs.20/-

Volume -12 Issue - 4 மலர் - 12 இதழ் -4

ISO 9001: 2015 CERTIFIED

JOURNALIST VOICE Tamil Monthly

ஆண்டுசந்தா 200/-
Annual Subscription 200/-



பிரபஞ்ச அறக்கட்டளை நிறுவனர் சுபத்ரா தேவி – ஒரு பார்வை



மிசாவா அல்லது கசமுசாவா



கலக்கியது யார்? கலங்கியது யார்?

FIND THE PERFECT SPACE
BUILD YOUR FUTURE

YOUR TRUST
OUR PROMISE
A NAME YOU CAN
RELY ON

YOUR
DREAM PROPERTY
IS JUST A STEP AWAY

INSHAH
PROPERTIES

FIND. BUY. SELL. RENT. INVEST.

YOUR LOCATION. PERFECT PROPERTY.

WE DEAL IN

RESIDENTIAL PROPERTIES | COMMERCIAL PROPERTIES | LAND & PLOTS | RENTAL PROPERTIES | INVESTMENT OPPORTUNITIES

WHY CHOOSE
INSHAH PROPERTIES?

- Verified Properties
- Transparent Deals
- Expert Guidance
- Best Market Value
- Hassle-Free Transactions
- End to End Support

We help you
FIND • BUY • SELL • RENT • INVEST
IN YOUR PERFECT PROPERTY



WE DON'T JUST
FIND PROPERTIES,
We Build Relationships.

LET THE RIGHT PLACE
YOU CAN CALL
Home

CALL US TODAY!
+91 98401 02958
www.inshahproperties.com

POWERED BY
INSHAH GROUP
OF COMPANIES
TRANSFORMING INDUSTRIES. BUILDING TOMORROW.

THE INSHAH GROUP ECOSYSTEM
INFOTECH | FINANCE | PROPERTIES | EDUCATION | TRADING | SERVICES | HEALTHCARE | AGRI

TRUST | INTEGRITY | INNOVATION | EXCELLENCE | COMMITMENT

ஜெர்னலிஸ்ட் வாய்ஸ்

ஆசிரியர்

Amb.DR. R.விஜய் ஆனந்த்.B.com LLB

துணை ஆசிரியர்கள்

A.சுபத்ரா. S.S.சங்கர்.

Lion. MD. ரஹீம் (திருப்பூர்)

T. ஸ்டாலின்.

DR. N.சண்முகம். B.A. P.L.V

DR. J.சுந்தரவேல் B.sc.,

A.P. ராஜவேல் பாரதி குமார்,

A.S நாசர் சலீம். K.N. சரவணன். ஜாக்கி சுரேஷ்.

பத்திரிகை ஆலோசகர்

DR. இ.இராமலிங்கம்.M.A. LLB.

T.M.J.RAJAN PRO

தலைமை நிருபர்கள்

K.சந்திரன் ஹரி (Pattalam)

A. வினோத் லயோலா M. கார்த்தி

நிருபர்கள்

மகேஷ். சங்கர். G. ஜெயராஜன்

s. அம்பிகா s. லதா M. செல்வம். S. முத்துகுமாரசாமி

s. கிரிஜா. திருத்தணி முகமது ஹாரூன். A. அருண்குமார்.

V. சுப்பிரமணியன். M. ரகுபதி

R. ஹரிஹரன். D. ரமேஷ் B. கருணமூர்த்தி

R தினகரன். V. மகேஷ். V. கண்மணி

P சோலைமுத்து. கோதாண்டராமன் (சிறப்புபடை கலைஞன்)

A. இப்பான். K. பரந்தாமன். P. செல்வகுமார்

s. ராமநாதன்.

அலுவலக தொடர்புக்கு

எண் 1. 8வது அவன்யூ 1வது மாடி.

பானு நகர். புதூர். அம்பத்தூர்.

சென்னை - 600053

அலுவலக தொடர்புக்கு:

CELL: 9841419191. 7200241683



அனைத்து வழக்குகளும் சென்னை குறிப்பிட்ட நீதிமன்றத்தின் எல்லைக்கு உட்பட்டது. இதழில் வரும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் குறிப்புக் கட்டுரையாளரின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே.



Amb.DR. R. விஜய் ஆனந்த் B.COM, LLB

ஆசிரியர் மற்றும் பிரபஞ்ச பத்திரிகை ஊடக சங்க தலைவர்

ஆசிரியர் உரை



சந்தாதாரர்கள், வாசகர்கள்,

விளம்பரதாரர்கள்,

பொதுமக்கள் என

அனைவருக்கும்

ஜெர்னலிஸ்ட் வாய்ஸ்

சார்பாக விநாயகர் சதுர்த்தி

நல் வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்கிறோம்

அனல் பறந்த சட்டமன்றம்... தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அமளி

பதிலுரையை நிறைவு செய்தார் முதல்அமைச்சர் விஜய்



தமிழக முதல்அமைச்சர் விஜய் சட்டமன்றத்தில் காவல்துறை மானியக் கோரிக்கை விவாதம் மீது பதிலளித்து பேசினார். அவரது பதிலுரைக்கு தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர்.

கடந்த 18 நாட்களாக நடைபெற்ற சட்டசபை கூட்டத்தில், முக்கிய நிகழ்வாக கடந்த 3–ந்தேதி (வியாழக்கிழமை) முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் கட்டுப்பாட்டில் உள்ள காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், அ.தி.மு.க. சட்டமன்ற தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் பேசியதால் சட்டசபையில் அனல் பறந்தது.

எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசிக் கொண்டிருந்தபோது, இடையே எழுந்து பேசிய முதல்–அமைச்சர் ஜோசப் விஜய், "உறுப்பினர்கள் கேட்கும் எல்லா கேள்விகளுக்கும் அதற்கான தெளிவான விளக்கத்தை திங்கட்கிழமை (இன்று) அளிக்கிறேன். தற்போது நான் இங்கே இல்லை என்றாலும் யார்–யார் என்ன கேள்விகள் கேட்கிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்துவிடும். எல்லாவற்றிற்கும் தெளிவான பதிலை சொல்வேன். தற்போது உங்கள் சார்பாக அவர்களிடம் உத்தரவாதம் ஒன்றை கேட்கிறேன். அப்போது அவர்கள் (தி.மு.க.) யாரும் எழுந்து ஓடிவிடக்கூடாது" என்று கூறிவிட்டு சட்டசபையை விட்டு

வெளியேறிவிட்டார்.

இந்நிலையில் 3 நாட்கள் விடுமுறைக்கு பிறகு தமிழக சட்டசபை இன்று (திங்கட்கிழமை) காலை 9.30 மணிக்கு மீண்டும் கூடியது. காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளித்து, த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் கரவொலியுடன் முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் தனது உரையை தொடங்கினார். அப்போது அவர் பேசியதாவது;–

"மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் அமைதிக்கு அடித்தளம் காவல்துறை. ஒரு மாநிலத்தின் அமைதியில் தான் முன்னேற்றம் உள்ளது. சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்தால்தான் தொழில் முதலீடுகள் வரும். சட்டத்தை மதிக்காதவர்களுக்கு காவல்துறை எதிரியாக இருக்க வேண்டும்.

அரசு பணியில் இருக்கும் ஒருவர் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, அவரது பெயர் நாளிதழ்களிலும், தொலைக்காட்சியிலும் வரும்போது அந்த செய்தி அவரை மட்டுமல்ல, அவரது குடும்ப உறுப்பினர்களையும் பாதிக்கிறது. எனவே அரசு ஊழியர்கள் தங்கள் பணியில் நேர்மையை கடைபிடித்து தங்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும் எந்த அவப்பெயரும் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதே சமயம், ஊழல் தடுப்பு அமைப்புகள் தங்கள் சட்டப்பூர்வமான கடமையை எந்தவித தயக்கமும் இன்றி தொடர்ந்து மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளில் த.வெ.க. அரசு எந்த சமரசமும் செய்யாது.

கடந்த கால ஆட்சியாளர்களால் போதைப்பொருள் கலாசாரம் கவனிக்கப்படாமல் இருந்ததால், அது



தற்போது வேரூன்றி வளர்ந்து நிற்கிறது. இது தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய சமூகப் பிரச்சினையாக இருந்து வருகிறது. போதைப்பொருள் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

இதற்காக போதைப்பொருள் தடுப்புப்படை தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை போதை என்கிற மரத்தின் ஒரு சில கிளைகளை மட்டும்தான் வெட்டியுள்ளோம். ஆனால் அதனை வேரடி மண்ணோடு அகற்ற வேண்டும். அது ஒரு நாளிலோ, 100 நாட்களிலோ முடிகின்ற பணி அல்ல.

மாநிலத்தின் 37 மாவட்டங்கள், 9 மாநகரங்களில் 65 போதைப்பொருள் தடுப்பு படைகள் அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின்கீழ் 3,263 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 4,350 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 4,846 கிலோ கஞ்சா மற்றும் 1 லட்சத்து 16 ஆயிரத்து 159 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுக்காப்பை மையமாக கொண்டு சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை



அமைக்கப்பட்டு, 2,546 புதிய பணி–யிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் அவர்களுக்கு 327 நான்கு சக்கர வாகனங்கள், 109 இரண்டு சக்கர வாகனங்கள், மற்றும் ரூ.357 கோடியில் நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின் மூலம் 268 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. காணாமல் போன 125 பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு அவர்களது குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டுள்ளனர். மேலும் 37,150 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 21 குழந்தை திருமணங்கள் தடுக்கப்பட்டுள்ளன.

காவல் மரணங்களை தடுக்கும் நடவடிக்கைகள்

காவல் மரணம் என்பது ஒரு குடும்பத்தின் இழப்பு மட்டுமல்ல. காவல்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை பாதிக்கும் மிக முக்கியமான பிரச்சினையாகும். எனவே காவலில் எந்தவொரு மரணம் ஏற்பட்டாலும் அதன் பாதிப்பு குறித்து வெளிப்படையான, பாரபட்சமற்ற, சட்டப்பூர்வமான விசாரணை நடத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி காவல் மரணம் தொடர்பான தகவல்கள் உரிய காலத்தில் தெரிவிக்கப்படுவதோடு, தேவையான மருத்துவ உடற்கூராய்வு மற்றும் மாஜி–ஸ்திரேட்டு விசாரணை நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு காவலர் தவறு செய்திருந்தால் அவர் காவல்துறையை சேர்ந்தவர் என்பதற்காக எந்தவித பாதுகாப்பும் வழங்கப்படுவதில்லை. தவறு செய்தவர் யாராக இருந்தாலும் சட்டம் தனது கடமையை சரிவர செய்து வருகிறது. காவல் நிலைய மரணங்களை முற்றிலும் தவிர்க்கும் நோக்கில் சி.சி.டி.வி. கண்காணிப்பு பயிற்சி, மருத்துவ பரிசோதனைல், தொழில்நுட்ப கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் வலுப்படுத்தப்படும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

‘வன்ம நதி ஓடுகிறது..’

தமிழ்நாட்டில் அண்மைக்காலமாக ஆபாச நதியாக, வன்ம நதியாக ஓடுகிறது. அரசியல் ரீதியாக கருத்துகளை பதிவுசெய்யலாம். பெண்களுக்கு எதிரான கருத்துகளை அனுமதிக்க மாட்டோம். பெண்களை பற்றி அவதூறாக பேசினால் சட்டம் தன் கடமையை செய்யும்.

இங்குள்ள ஒரு உறுப்பினர், எலும்பை உடைப்பேன் என்று பேசுகிறார். அவர் என்ன ஆர்த்தோ டாக்டரா? தி.மு.க.வுக்கு ஓட்டு போடாதவர்களுக்கு நல்ல சாவு வராது என ஒருவர் பேசுகிறார். இப்படி பேசியதால்தான், இவர்கள் எதிர்கட்சியில் அமர்ந்திருக்கிறார்கள். மக்கள் தீர்ப்பை கொஞ்சமாவது மதிக்க வேண்டும்.

ஒரு சாம்பிள் பார்க்கலாமா?

“என் மேஜையில் இருக்கும் 3 பைல்களை ஓப்பன் செய்யுமாறு தி.மு.க.வினர் கூறினர். அதில் ஒரு சாம்பிளை பார்க்கலாமா? கடந்த ஆட்சியில் அமலாக்கத்துறை அனுப்பிய விவரங்களை படிக்கிறேன்.

சர்க்காரியா கமிஷன் –1977: தி.மு.க. ஆட்சியில் வீராணம் குழாய் திட்டத்துக்கு

டெண்டர் வேண்டுமென்றால் இரண்டரை சதவீத கமிஷன் வேண்டும் என மாறன் கேட்டாராம். அதவது 40 லட்ச ரூபாய் கமிஷனாம். 1770–1974 வரை மொத்தம் 25 லட்சம் லஞ்சம் கொடுக்கப்பட்டதாக அதில் சொல்லப்பட்டுள்ளது. தவனையாக லஞ்சம் வாங்கியுள்ளனர். முரசொலி கட்டிடத்துக்கு, மேலும் பல விஷயத்துக்காகவும் கமிஷன் வாங்கியுள்ளனர். இதெல்லாம் அமலாக்கத்துறையின் குற்றச்சாட்டு. சத்யநாராயணா பிரதர்ஸ்க்கு டெண்டர் கொடுப்பதற்காக கருணாநிதி தனது முதல்–அமைச்சர் பதவியை தவறாக பயன்படுத்தியுள்ளார்.

இதெல்லாம் சொன்னால் ஓடிவிடுவார்கள். ஆதாரங்கள் கேட்டால் இங்குள்ள நூலகத்தில் உள்ளது. அங்கு போய் பாருங்கள். ஆதாரத்தை பக்கத்துலேயே வைத்துக்கொண்டு பிறரிடத்தில் தேடுகின்றனர். ஆதாரம் பக்கத்திலேயே உள்ளது.

கட்சி நிதி

கட்சி நிதி குறித்து தி.மு.க.வின் ஊழல் குறித்து அமலாக்கத்துறை கூறியுள்ளது. 7.5 சதவீதத்தில் இருந்து 10 சதவீதம் வரை கட்சி நிதி வாங்கியுள்ளதாக அமலாக்கத்துறை கூறியுள்ளது. அதன் ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அந்த துறைக்கு அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி தனது அதிகாரத்தை தவறாகபயன்படுத்தியுள்ளார். எவ்வளவு பெரிய சாதனை. அதுதான் தி.மு.க.

டாஸ்மாக்கை கையில் வைத்திருந்த அமைச்சருடன் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் இதில் சிக்கியுள்ளனர். செந்தில் பாலாஜியின் சகோதரர் குறித்தும் அமலாக்கத்துறை சொல்லியுள்ளது. பார்ட்டி பண்ட்(கட்சி நிதி) வாங்கியதில் முக்கிய நபர்கள் மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் என அமலாக்கத்துறை கூறியுள்ளது.

தி.மு.க. இருக்குமிடத்தில் ஊழல் இருக்காது என அவர்கள் கூறுகின்றனர். நான் கூறுகிறேன். தி.மு.க. இருக்குமிடத்தில் ஊழல்கள் இருக்கும். ஊழல்கள் இருக்குமிடத்தில் தி.மு.க. இருக்கும்.

ஆதாரம் போதுமா?

ஆதாரம் வேண்டும் என்றீர்களே.. போதுமா.. 2 வகை உள்ளது. தவறு செய்து மாட்டிக்கொள்வதற்கள் ஒரு பக்கம். தவறு செய்து, செய்யாதபடி சரியாக செய்பவர்கள் இன்னொரு பக்கம். அதில் தி.மு.க. 2 வது பக்கம். ஊழல் என்று சொன்னாலே தி.மு.க.வினர் எழுந்திரிப்பார்கள். ஊழல் செய்யவில்லை என்று அவர்களால் கூற முடியுமா?

மிசாவை பார்த்தவர்கள், மிசாவை பார்த்தவர்கள் என்று சொல்கிறார்கள். மிசாவை பற்றிய வரலாறு எனக்கும் தெரியும். சட்டம், ஒழுங்கு பற்றி பேசுவதற்கு முன் உங்கள் ஆட்சியில் நடந்ததை கண்ணாடியில் பார்ப்பது நல்லது.

இறைவன் நமது பக்கம்

அண்ணா, எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர்., விஜய். இயற்கையும், இறைவனும் நமது பக்கம்தான் இருப்பார்கள். அன்புக்கு முன்னாடி அவர்கள் தோற்பது உறுதி. நாற்காலிக்காக அதிகாரத்திற்காக நான் இங்கு வரவில்லை, மக்களுக்கு நல்லது செய்யவும், நன்றி கடன் செய்யவும் மட்டுமே வந்துள்ளேன்.

பதிலுரை நிறைவு

சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ள 22–ம் எண் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான தீர்மானங்களை நான் படித்துப் பார்த்தேன். அவை விதிகளுக்கு உட்பட்டவையாகவும், அரசின் நிதி நிலைக்கு ஏற்ப செயல்படுத்தக் கூடியவையாகவும் இருக்கும் பட்சத்தில், அரசு அதனை கனிவுடன் பரிசீலிக்கும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே உறுப்பினர்கள் எனது

பதிலுரையில் கூறிய விளக்கத்தை ஏற்றுக் கொண்டு தங்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், இந்த மானியக் கோரிக்கைகளை பேரவை தலைவர் நிறைவேற்றித் தர வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன். காவல்துறை, தீயணைப்புத்துறை மற்றும் மீட்புப்படைகள் சிறப்பாக செயல்பட எனக்கு உறுதுணையாக இருந்து வரும் உள்துறை கூடுதல் தலைமை செயலாளர், தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை பெருநகர் காவல் ஆணையர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர், அனைத்து காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் அனைத்து காவல்துறை சகோதர, சகோதரிகளுக்கும் எனது நன்றிகளை தெரி–வித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு அவர் பேசினார்.

கடும் அமளி

முதல்–அமைச்சர் தனது பதிலுரையை வழங்கிக் கொண்டிருக்கும்போது தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அவரது பேச்சுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து கூச்சலிட்டனர். தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பலர் எழுந்து நின்று முதல்–அமைச்சரின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர்.

அவர்களுக்கு பேச அனுமதி வழங்கக் கோரி முழக்கங்களை எழுப்பினர். இதனால் சட்டமன்றத்தில் பெரும் பரபரப்பான சூழல் நிலவியது. கடும் அமளிக்கு இடையே காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மீதான மானியக் கோரிக்கைகள் மீதான தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியதாக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்தார்.

சபாநாயகர் கண்டனம்

தொடர்ந்து தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் குரல் கொடுத்து வந்த நிலையில், சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அவர்களை கண்டித்தார். இது குறித்து அவர் கூறியதாவது;–

"முதல்–அமைச்சர் விஜய் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாரே, அவர் எப்போது பதில் சொல்வார் என்றெல்லாம் கேட்டார்கள். முதல்–அமைச்சரின் பதிலுரை திங்கட்கிழமை இருக்கிறது என்று சொன்னேன். அதன்படி முதல்–அமைச்சர் இன்று தனது பதிலுரையை வழங்கியபோது பல ஆதாரப்பூர்வமான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.


மக்கள் மன்றத்தின் முன்பாக முதல்–அமைச்சரின் பதிலுரை முழுமையாக நேரலை செய்யப்படும்போது, என்னுடைய அனுமதி இல்லாமல் போஸ்டர்களை கொண்டு வந்து இங்கே காட்டுவதும், குரல் கொடுப்பதும் சரியல்ல. உங்கள் நோக்கம் அவரது பேச்சு வெளியே போகாமல் தடுக்க வேண்டும் என்பதாக இருந்திருந்தால், அதை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. நீங்கள் அலுத்துப் போகும் வரை குரல் கொடுத்தீர்கள், ஆனால் முதல்–அமைச்சர் தனது பேச்சை முழுமையாக நிறைவு செய்துள்ளார்.

முதல்–அமைச்சர் எப்போது பேசுவார் என்று கேட்ட நீங்கள், அவர் பதிலளிக்கும்போது அமைதியாக கேட்டிருக்க வேண்டும். உங்கள் விளக்கத்தை நீங்கள் அளிப்பதற்கான வாய்ப்புகள் எல்லாம் இருந்தன. ஆனால் அந்த வாய்ப்புகளை நீங்கள் இழந்துவிட்டீர்கள். இந்த அவையில் முதல்–அமைச்சர் பேசும்போது ஆரம்பத்தில் இருந்து கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்தியது தவறு. உங்கள் போஸ்டர்களை கொண்டு வந்து காட்டுகின்ற இடம் அல்ல இது. இதை வன்மையாக கண்டிக்கின்றேன். முதல்–அமைச்சரின் பதிலுரை நிறைவடைந்துவிட்டது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

‘பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் ஏன் கூடாது?’

அன்புமணி அடுக்கும் காரணங்கள்



“பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவதில் உள்ள மிகப்பெரிய சிக்கல் போக்குவரத்து நெரிசல். எனவே, தமிழ்நாட்டுக்கான தலைமைச் செயலகம், சட்டப்பேரவைச் செயலகம் ஆகியவற்றையும் சென்னைக்கு வெளியில் ஒருங்கிணைந்த நிர்வாக நகரமாக உருவாக்க வேண்டும்.” என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவைக்கு 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய வளாகம் அமைக்கப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்திருந்த நிலையில், பட்டினப்பாக்கம் பகுதியில் அந்த வளாகம் அமைக்கப்படவிருப்பதாக ஊடகங்களில் அதிகாரப்பூர்வமற்ற செய்திகள் வெளியாகி உள்ளன. இந்த செய்திகள் உண்மையாக இருந்தால் அது தொலைநோக்குப் பார்வையற்றதாகவே இருக்கும்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் கடந்த 3ஆம் தேதி அவை விதி எண் 110-ன் கீழ் அறிவிப்பு வெளியிட்ட முதலமைச்சர் விஜய், தலைமைச் செயலகம், சட்டப்பேரவைச் செயலகம் மற்றும் அனைத்துத் துறை அலுவலகங்கள் அடங்கிய நிர்வாக வளாகம் ரூ.1200 கோடி செலவில், 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படும் என்று அறிவித்தார். அதைத் தொடர்ந்து கடந்த சில நாள்களாகவே சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் புதிய தலைமைச் செயலக வளாகம் அமைக்கப்படும் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

அந்தப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான 21.37 ஏக்கர் நிலம், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 0.93 ஏக்கர் நிலம், வருவாய்த் துறையில் ஆவணங்கள் இல்லாத 1.20 ஏக்கர் நிலம் உள்பட மொத்தம் 26.36 ஏக்கர் பரப்பளவில் 15 மாடி கட்டிடமாக புதிய வளாகம் அமைக்கப்படும்; அதில் அனைத்து வசதிகளும் இடம் பெறும் என்று ஊடகங்களில் வெளியான செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசுக்கு புதிய தலைமைச் செயலகம் தேவை என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து கிடையாது. கடந்த 25 ஆண்டுகளாகவே புதியத் தலைமைச் செயலகத்திற்கான தேடல் நீடித்துக் கொண்டே இருக்கிறது. ஆனாலும், இடம் அடையாளம் காண்பது முதல் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 80%க்கும் கூடுதலான பணிகள் முடிந்த நிலை வரை பல்வேறு கட்டங்களில் அம்முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், இப்போது புதிய அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த முயற்சி வரவேற்கத்தக்கது. எனினும், புதிய தலைமைச் செயலக வளாகம் பட்டினப்பாக்கத்தில் தான் அமையும் என்றால் அதனால் ஏற்படும் சாதகங்களை விட பாதகங்களே அதிகம்.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவதில் உள்ள மிகப்பெரிய சிக்கல் போக்குவரத்து நெரிசல் ஆகும். சாந்தோம் சாலையிலும், பசுமைவழிச் சாலையிலும் ஏற்கனவே கடுமையான போக்குவரத்து நெரிசல் காணப்படும் நிலையில், அதை சமாளிப்பதற்காகத் தான் லூப் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் தான் புகழ்பெற்ற சாந்தோம் தேவாலயம், புகழ்பெற்ற பள்ளிக் கூடங்கள், பத்திரப்பதிவுத்துறை தலைவர் அலுவலகம் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்கள் உள்ளன. இவற்றுடன் புதிய தலைமைச் செயலகமும் அமைக்கப்பட்டால் அப்பகுதியில் சமாளிக்க முடியாத அளவுக்கு நெரிசல் ஏற்படும் வாய்ப்புள்ளது.

அடுத்ததாக, புதிய தலைமைச் செயலகம், சட்டப்பேரவை வளாகம், அனைத்துத் துறை அலுவலங்களைக் கொண்ட வளாகம் அமைக்க இப்போது அடையாளம் காணப்பட்டிருப்பதாகக் கூறப்படும் 26.36 ஏக்கர் நிலம் போதுமானதல்ல. மொத்தம் 20 லட்சம் சதுர அடி பரப்பளவிலான வளாகம் 15 மாடிக் கட்டிடமாக கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், எப்.எஸ்.ஐ விதிகளின்படி அதற்கேற்ற வகையில் காலி இடமும், பசுமைப் பரப்பும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

இவை தவிர ஓர் தலைமைச் செயலக வளாகம் செயல்படும் இடத்தில், தீயணைப்பு நிலையம், அவசர மருத்துவ வசதிகள், உணவகங்கள், வாகன நிறுத்துமிடங்கள், பொதுப்போக்குவரத்து வசதிகள் உள்ளிட்டவை ஏற்படுத்தித் தரப்பட வேண்டியது கட்டாயமாகும். இத்தகைக் கட்டமைப்பு வசதிகளையும் இப்போது அடையாளம் காணப்பட்டுள்ள இடத்தில் ஏற்படுத்தினால், இப்போதுள்ள தலைமைச் செயலக வளாகத்தில் ஏற்பட்டதைப் போன்ற இட நெருக்கடி மிக விரைவில் புதிய வளாகத்திலும் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

புதிய தலைமைச் செயலகம் அமைப்பது குறித்த அறிவிப்பை வெளியிட்ட முதல்வர் விஜய், புதிய வளாகம் அடுத்த நூறாண்டுகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அமையும் என்று தெரிவித்தார். முதல்வரின் இந்த கனவு நிறைவேற வேண்டும் என்றால், அதற்கு பட்டினப்பாக்கம் பொருத்தமான இடம் அல்ல என்பது தான் எனது கருத்து.

முதலமைச்சர் விஜய் தொலைநோக்குப் பார்வையுடன் இதற்காக சென்னைக்கு வெளியில் குறைந்தது 500 முதல் 1000 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த நிர்வாக நகரத்தை அமைப்பதற்கான முன்னேற்பாடுகளைத் தொடங்க வேண்டும் என்பது தான் பாமகவின் கோரிக்கை ஆகும்.

ஓர் அரசின் கட்டுப்பாட்டு அறையாக திகழ்வது தலைமைச் செயலகம் தான். அத்தகைய தலைமைச் செயலகத்தில் இடம் பற்றாக்குறையாக உள்ளது; அதனால் புதிய தலைமைச் செயலகம் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை உலகம் முழுவதும் ஜனநாயகம் தழைக்கத் தொடங்கிய கடந்த ஒரு நூற்றாண்டாக ஒலித்துக் கொண்டு தான் இருக்கிறது. உலகின் பல நாடுகளில் அதற்கானத் தீர்வு ஒருங்கிணைந்த நிர்வாக நகரம் அமைப்பதாகவே இருந்திருக்கிறது. இந்த விஷயத்தில் ஒட்டுமொத்த உலகத்திற்கும் இந்தியா தான் வழிகாட்டியாக இருந்துள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சியில், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசின் தலைமைச் செயலகம் கொல்கத்தாவில் இருந்து தில்லிக்கு மாற்றப்பட்டது. அப்போது மொகலாயர் ஆட்சியின் தலைநகரமாக இருந்த டெல்லியில் போதிய இட வசதிகள் இல்லாததால், புதுதில்லி என்ற நிர்வாக நகரத்தை உருவாக்க முடிவு செய்யப்பட்டு அதற்கு 1911 ஆம் ஆண்டு திசம்பர் 12 ஆம் தேதி அடிக்கல் நாட்டப்பட்டது. 1932 ஆம் ஆண்டில் திறப்பு விழா செய்யப்பட்ட அந்த நகரத்தில் தான் ஆங்கிலேயர் காலம் தொடங்கி இன்று வரை அரசின் தலைமைச் செயலகம், சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்றம், குடியரசுத் தலைவர் மாளிகை, உச்சநீதிமன்றம் உள்ளிட்டவை செயல்பட்டு வருகின்றன.


மலேசியாவில் இதே போன்ற சிக்கல் ஏற்பட்ட போது, கோலாம்ம்பூரில் இருந்து 34 கி.மீ தொலைவில் உள்ள புத்ரஜெயாவில் புதிய தலைமைச் செயலகம் உருவாக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. தென் அமெரிக்காவின் பிரேசில் இன்னும் ஒரு படி மேலே சென்று தலைநகரத்தையே ரியோடி ஜெனிரோ நகரத்திலிருந்து 928 கி.மீ தொலைவில் பிரேசிலியா என்ற புதிய நிர்வாக நகரத்தை உருவாக்கி அங்கு மாற்றியது.

2001–ம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற ஜெயலலிதா கிழக்குக் கடற்கரை சாலையில் ஒருங்கிணைந்த நிர்வாக நகரத்தை அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டார். இந்த முன்னுதாரணங்களை பின்பற்றி தமிழ்நாட்டுக்கான தலைமைச் செயலகம், சட்டப்பேரவைச் செயலகம் ஆகியவற்றையும் சென்னைக்கு வெளியில் ஒருங்கிணைந்த நிர்வாக நகரமாக உருவாக்க வேண்டும்.

அதில் தலைமைச் செயலகம், சட்டப்பேரவைச் செயலகம், அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கான மாளிகைகள், அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகள், மெட்ரோ ரயில் உள்ளிட்ட பொதுப்போக்குவரத்து வசதிகள், தேசிய, உலகத் தலைவர்கள் வருகை தருவதற்கு வசதியாக ஹெலிகாப்டர் இறங்கு தளங்கள், தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவைச் செயலகத்தில் பணியாற்றும் செயலாளர்கள் நிலையிலான அதிகாரிகள் தொடங்கி கடைநிலைப் பணியாளர்கள் வரை அனைத்துப் பணியாளர்களின் பிள்ளைகள் படிப்பதற்குத் தேவையான பள்ளிகள், கல்லூரிகள், உள் விளையாட்டு அரங்குகள், வணிக வளாகங்கள் என ஒரு நகரத்திற்கு என்னென்ன அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் தேவையோ, அவை அனைத்தையும் கட்டமைத்துக் கொடுக்கவும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இடைத்தேர்தலில் பாஜக ஆதரவை கோரிய அதிமுக:

நயினார் நாகேந்திரனுடன் முன்னாள் அமைச்சர்கள் சந்திப்பு



இடைத்தேர்தலில் அதிமுகவுக்கு ஆதரவு தருமாறு பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனை சந்தித்து கடிதம் வழங்கிய அதிமுக முன்னாள் அமைச்சர்கள்.

இடைத்தேர்தலில் அதிமுகவுக்கு ஆதரவு தருமாறு பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனை சந்தித்து அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கடிதம் வழங்கினர்.

தாராபுரம், மதுராந்தகம் ஆகிய 2 தொகுதிகளுக்கு அக்.6-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 2 தொகுதிகளும் கடந்த தேர்தலில் அதிமுக வெற்றி பெற்ற தொகுதிகள் என்பதால், மீண்டும் அவற்றில் வெல்ல அதிமுக தீவிரம் காட்டி

வருகிறது.

இந்நிலையில், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், ஓ.எஸ்.மணியன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சென்னை கமலாலயத்தில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனை சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன் உள்ளிட்டோர் இருந்தனர்.

2 தொகுதி இடைத்தேர்தலில் ஆதரவு கோரி அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி எழுதிய கடிதத்தை நயினார் நாகேந்திரனிடம் கே.பி.முனுசாமி வழங்கினார். தொடர்ந்து, மற்ற தோழமைக் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து ஆதரவு திரட்ட அதிமுக திட்டமிட்டுள்ளது.

இந்த சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களிடம் கே.பி.முனுசாமி கூறியதாவது: கடந்த தேர்தலில் மக்கள் அதிமுகவை நம்பி வாக்களித்து வெற்றி பெறச் செய்தனர். ஆனால், வெற்றி பெற்றவர்கள் மக்களை ஏமாற்றி விட்டு சென்றுவிட்டனர்.

மீண்டும் மக்கள் நம்பிக்கையோடு அதிமுக வேட்பாளர்கள் களம் இறக்கப்பட்டு உறுதியாக வெற்றி பெறுவார்கள். எங்கள் கடிதத்தை பாஜக தலைவர் இன்முகத்தோடு பெற்றுக்கொண்டார். கட்சித் தலைமையுடன் ஆலோசித்து நல்ல முடிவை அறிவிப்பதாகக் கூறியுள்ளார்" என தெரிவித்தார்.இடைத்தேர்தலில் அதிமுகவுக்கு ஆதரவு தருமாறு பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனை சந்தித்து அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கடிதம் வழங்கினர்.

தாராபுரம், மதுராந்தகம் ஆகிய 2 தொகுதிகளுக்கு அக்.6–ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 2 தொகுதிகளும் கடந்த தேர்தலில் அதிமுக வெற்றி பெற்ற தொகுதிகள் என்பதால், மீண்டும் அவற்றில் வெல்ல அதிமுக தீவிரம் காட்டி வருகிறது.

இந்நிலையில், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், ஓ.எஸ்.மணியன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சென்னை கமலாலயத்தில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனை சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன் உள்ளிட்டோர் இருந்தனர்.

2 தொகுதி இடைத்தேர்தலில் ஆதரவு கோரி அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி எழுதிய கடிதத்தை நயினார் நாகேந்திரனிடம் கே.பி.முனுசாமி வழங்கினார். தொடர்ந்து, மற்ற தோழமைக் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து ஆதரவு திரட்ட அதிமுக திட்டமிட்டுள்ளது.

இந்த சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களிடம் கே.பி.முனுசாமி கூறியதாவது: கடந்த தேர்தலில் மக்கள் அதிமுகவை நம்பி வாக்களித்து வெற்றி பெறச் செய்தனர். ஆனால், வெற்றி பெற்றவர்கள் மக்களை ஏமாற்றி விட்டு சென்றுவிட்டனர்.

மீண்டும் மக்கள் நம்பிக்கையோடு அதிமுக வேட்பாளர்கள் களம் இறக்கப்பட்டு உறுதியாக வெற்றி பெறுவார்கள். எங்கள் கடிதத்தை பாஜக தலைவர் இன்முகத்தோடு பெற்றுக்கொண்டார். கட்சித் தலைமையுடன் ஆலோசித்து நல்ல முடிவை அறிவிப்பதாகக் கூறியுள்ளார்" என தெரிவித்தார்.

ஈரான் அமெரிக்கா போர்: 6 மாத நிறைவில் கிட்டிய 'முடிவு'தான் என்ன?



'4 முதல் 5 வாரங்களில் போர் முடிந்துவிடும்' என அமெரிக்க அரசால் கணிக்கப்பட்டு, ஈரான் மீது தொடங்கப்பட்ட போர் 6 மாதங்களைக் கடந்தும் முடியவில்லை. துப்பாக்கிச் சத்தம் ஓயாத மத்திய கிழக்கில், 'யார் ஜெயித்தார்?' என்ற கேள்வியை விட 'யார் எதை இழந்தார்?' என்ற கேள்விதான் பூதாகரமாக எழுந்துள்ளது.

வான்வழித் தாக்குதல்களும், பொருளாதாரத் தடைகளும் ஒரு தேசத்தைச் சாய்த்துவிடும் என்ற கணிப்பு தவிடுபொடியாகி, உலகப் பொருளாதார நெருக்கடியின் வாசலில் மத்திய கிழக்கு நிற்கிறது.

ஈரானின் ராணுவ உள்கட்டமைப்புகளும் தலைமையும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அதே வேளையில், போரை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்காவும் பல்வேறு ராஜாங்க ரீதியிலான நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. இந்தப் போரின் உண்மையான தாக்கத்தை ராணுவ வெற்றிகளைக் கொண்டு கணக்கிடுவதை விட, உலகப் பொருளாதாரம் மற்றும் பிராந்திய அமைதியில் அது ஏற்படுத்திய மாற்றங்களைக் கொண்டே மதிப்பிட முடிகிறது.

ஈரானிய மக்கள் மற்றும் பொருளாதாரத்தின் மீது விழுந்த பலத்த அடியும், வளைகுடாப் பிராந்தியத்தில் அமெரிக்கா எதிர்கொள்ளும் பாதுகாப்புச் சவால்களும், தீவிர ராணுவ நடவடிக்கைகளுக்குப் பதிலாகத் தூதரக வழிமுறை ஏன் அவசியம் என்பதை மீண்டும் ஒருமுறை உலகரங்குக்கு வலியுறுத்தியுள்ளன.

அரசியல் விலை கொடுத்த ட்ரம்ப்

ஈரான் மீதான போரை "ஒரு சிறிய உல்லாசப் பயணம்" என்று அமெரிக்க

அதிபர் டொனால்டு ட்ரம்ப் வர்ணித்த நிலை, மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி, அவரது அதிபர் பதவியையே ஆட்டம் காண வைக்கும் அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது.

ஈரானுடனான அமெரிக்கப் போருக்கு அமெரிக்க மக்களிடையே ஆரம்பத்–திலிருந்தே ஆதரவில்லை. தொடக்கத்தில் 40 சதவீதமாக இருந்த ஆதரவு, பின்னர் 33 சதவீதமாகக் குறைந்தது. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையைக் குறைப்பேன் என ட்ரம்ப் அளித்த வாக்குறுதியைப் இந்தப் போர் பலவீனப்படுத்தி, மாறாக விலையை அதிகரிக்கச் செய்தது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை போரைத் தொடங்கிவிட்டது; ஆனால், அதை எப்படி முடிப்பது எனத் தெரியவில்லை. அமெரிக்காவின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் ஈரான் வலுவான பதில் தாக்குதலை அளித்ததால், அமெரிக்காவால் தாக்குதலின் தீவிரத்தை அதிகப்படுத்த முடிந்ததே தவிர, குறைக்கவோ பின்வாங்கவோ முடியவில்லை.

போர்களை முடிவுக்குக் கொண்டு வருவதாக வாக்குறுதியளித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்த அதிபர் ட்ரம்ப், ஈரானின் ஏவுகணைக் குவிப்பு மற்றும் அணுசக்தி செறிவூட்டலுக்கு எதிராக நடக்கும் போர் என்று மக்களிடம் எடுத்துக் கூறினாலும் மக்கள் அதை நம்பவில்லை.

ஈரானைப் பொறுத்தவரை அது சரணடையவில்லை. மாறாக, உலகத்துக்கு கச்சா எண்ணெய் சப்ளை செய்யும் முக்கிய வழியான ஹார்முஸ் நீரிணையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து போக்குவரத்தையே முடக்கியது. அதிபர் ட்ரம்ப் சார்ந்திருக்கும் குடியரசுக் கட்சி–யினரும் எரிபொருள் விலை உயர்வு நவம்பர் இடைத்தேர்தலில் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்தும் என நம்புகிறார்கள்.

உலகப் பொருளாதாரத்தை அசைத்த போர்

ஹார்முஸ் நீரிணையை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. ஈரானின் தடையால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை வெகுவாக உயர்ந்து, உலகளாவிய பொருளாதார மந்தநிலை குறித்த அச்சத்தையும் தூண்டியது. ஆனால், இந்த அச்சம் பொருளாதார வல்லுநர்கள் எண்ணியதை விடக் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்தியது.

உலக நாடுகள் மாற்று வழியைத் தேடத் தொடங்கியதன் விளைவால் பொருளாதாரம் அசைத்துப் பார்க்கப்பட்டதே தவிர, வேரோடு பிடுங்கப்படவில்லை. சர்வதேச நாணய நிதியம் (மிவிதி) தனது உலகப் பொருளாதார வளர்ச்சி குறித்த கணிப்பை இருமுறை குறைத்தது.

ஈரான் காயம்பட்டது... தோற்கவில்லை!

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுடன் நடந்த போரில் ஈரானுக்குப் பலத்த பாதிப்புகள் ஏற்பட்டது உண்மைதான். ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி உள்ளிட்டோர் கொல்லப்பட்டனர். உள்கட்டமைப்புகள், ராணுவ மையங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. நாட்டின் பணவீக்கம் அதிகரித்து, அத்தியாவசியப் பொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்தது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சரிவைக் கண்டது. இருப்பினும், இவற்றால் ஈரான் தோற்றுவிட்டது என்று கூற இயலாது.

உலகின் 20% கச்சா எண்ணெய் கடந்து செல்லும் ஹார்முஸ் நீரிணையின்

கட்டுப்பாட்டை இப்போதுவரை ஈரான் தன்வசம் வைத்திருப்பதே அப்போரில் ஈரான் தோற்கவில்லை என்பதைக் காட்டுகிறது. அமெரிக்காவின் பேட்ரியாட், தாட் ஏவுகணைகளை எதிர்க்க ஈரான் தனது மலிவு விலை ட்ரோன்கள் மூலம் சவால் விடுத்து பெரும் இழப்பை ஏற்படுத்தியது. இந்தப் போர் ஈரானுக்குக் காயத்தை ஏற்படுத்தியிருக்கலாம்; ஆனால், தோற்கடிக்கவில்லை.

மேற்காசியாவில் ஈரான் அச்சுறுத்தலாக இருப்பதை அகற்றவே அமெரிக்க – இஸ்ரேல் கூட்டணி போர் தொடுத்தது. ஆனால், ஈரானின் செயல்பாடுகள் அதற்கு மாறாக அமைந்தன. அமெரிக்காவை நேரடியாகத் தாக்காமல், அந்நாட்டுக்கு ஆதரவாக இருந்த நாடுகளைத் துவம்சம் செய்து, பிராந்தியத்தைப் பாதுகாப்பற்றதாக ஈரான் ஆக்கியுள்ளது. சவுதி அரேபியா, ஐக்கிய அமீரகம் மற்றும் பஹ்ரைன் போன்ற வளைகுடா நாடுகள் மீது போர் மறைமுகப் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவுக்குத் தோல்வியா?

ஈரானின் போர்த் திட்டத்தைச் சரியாகக் கணிக்காமல் அமெரிக்கா நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியவில்லை. அமெரிக்க ராணுவமும் பல ஆளில்லா விமானங்கள் மற்றும் 42 போர் விமானங்களை இழந்துள்ளது. தனது பேட்ரியாட் ஏவுகணைகளில் 65 சதவீதத்தையும், தாட் ஏவுகணைகளில் 38 சதவீதத்தையும் அமெரிக்கா பயன்படுத்திவிட்டது.

ஈரானின் அணுசக்தித் திட்டங்களை முழுமையாக அழிக்கவே அமெரிக்கா போர் தொடுத்தது. ஆனால், அமெரிக்காவின் நோக்கம் நிறைவேறவில்லை. மேலும், போரை முடிக்க தேவையான ராஜதந்திர வழி அமெரிக்காவிடம் இல்லை. இதனால் இந்தப் போரை நீண்டகாலப் போராக மாற்றியது.

ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும், துல்லியமான வெற்றியாளரைத் தீர்மானிக்க முடியாமல், இரு தரப்பிற்குமே பெரும் இழப்புகளையும், உலக நாடுகளுக்குப் பொருளாதாரச் சுமையையும் மட்டுமே இந்தப் போர் பரிசாக அளித்துள்ளது.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அக்டோபர் 6-ம் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள நிலையில் அத்தொகுதிகளுக்கான வேட்பாளர்களை தவெக அறிவித்துள்ளது. மதுராந்தகம் (தனி) தொகுதியில் மரகதம் குமாரவேல், தாராபுரம் (தனி) தொகுதியில் சத்தியபாமா போட்டியிடுவார்கள் என்று தவெக தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.



மரகதம் குமாரவேல் (இடது), சத்தியபாமா (வலது)

ஓபிசி பிரிவினரை சாதி பெயர்கள் அடிப்படையில் கணக்கெடுக்க வேண்டும்

பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றம்

மக்கள்தொகை கணக்கெடுப்பில் ஓபிசி பிரிவினரை மத்திய, மாநில அரசுகளால் வெளியிடப்பட்ட பட்டியலில் உள்ள சாதி பெயர்கள் அடிப்படையில் கணக்கெடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் நேற்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் நேற்று பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் வே.சம்பத் குமார், மத்திய அரசின் 2027–ம் ஆண்டின் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் (ஓபிசி) சாதி விவரங்களை மாநில மற்றும் மத்திய அரசுகளால் வெளியிடப்பட்ட பட்டியலில் உள்ள சாதிப் பெயர்களின் அடிப்படையில் மட்டுமே பதிவு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி அரசினர் தனி தீர்மானத்தை முன்மொழிந்து பேசியதாவது: நாட்டில் 1931–ல் முழுமையான சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு 2011 வரை நடைபெற்ற மக்கள்தொகை கணக்கெடுப்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினரின் சாதி விவரங்கள் மட்டுமே சேகரித்து வெளியிடப்பட்டது. 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதன்முறையாக முழு சாதிவாரி கணக்கெடுப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டு, முதல்கட்ட பணி முடிவடைந்துள்ளது. 2–ம் கட்டமாக பிப்.27–ம் தேதி நடைபெற உள்ள மக்கள்தொகை கணக்கெடுப்புக்காக விவரங்கள் சேகரிக்கப்பட உள்ள 40 வினாக்கள் அடங்கிய பட்டியலை மத்திய அரசு கடந்த மாதம் அறிவித்தது.


அதில் வினா எண் 10–ல் எஸ்சி, எஸ்டி மற்றும் சாதி தொடர்பான விவரங்கள் கேட்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சாதி விவரங்களை வீடு வீடாக சென்று சேகரிக்கும் இந்த நிகழ்வில் எஸ்சி, எஸ்டி சாதியில் கணக்கெடுப்பு செயலியில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட பட்டியலில் இருந்து நேரடியாக தேர்வு செய்யும் வகையில் சீராக அமைக்கப்பட உள்ளது.

ஆனால், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட ஓபிசி வகுப்பினருக்கு சாதி என்ற பிரிவின்கீழ் பொதுமக்கள் தெரிவிக்கும் பெயர்களை நேரடியாக தட்டச்சு செய்யும் திறந்தவெளி பதிவு முறை பின்பற்றப்பட உள்ளதாக தெரிகிறது. இது ஓபிசி பிரிவினரின் பிரதிநிதித்துவம் கல்வி, வேலை வாய்ப்பில் பாதிப்பை ஏற்படும். அதற்காகவே இந்த தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

தீர்மானத்துக்கு ஆதரவாக அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, ராஜேஷ்குமார், வன்னியரசு, ஷாஜகான் மற்றும் சி.வி.சண்முகம் (அதிமுக), போஜராஜன் (பாஜக), கணேஷ்குமார் (பாமக), மாரிமுத்து (இந்திய கம்யூனிஸ்ட்), செல்லசாமி (மார்க்சிஸ்ட்) ஆகியோர் ஆதரித்து பேசினர். பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பாஜகவுக்கு எதிரான அகிலேஷ், டிம்பிளின் 'பிடிஏ' வியூகம்

உபி தேர்தல் களம் 2027 எப்படி?



"டெல்லி சிம்மாசனத்துக்கான வழி, லக்னோவின் வீதிகள் வழியாகவே கடந்து செல்கிறது" என்பது தேசிய அரசியலில் புகழ்பெற்ற ஒரு வாக்கியம்.

இந்திய அரசியலின் தலையெழுத்தையே நிர்ணயிக்கும் திறன் கொண்ட உத்தரப் பிரதேச மாநிலத்தில், மீண்டும் ஓர் அதிகார அக்னிப் பரீட்சை தொடங்கப் போகிறது. ஒருபுறம் யோகி ஆதித்யநாத்தின் வீச்சுமிக்க இந்துத்துவ கொள்கை, மறுபுறம் அதைத் தகர்க்கத் துடிக்கும் அகிலேஷ் யாதவின் 'பிடிஏ' என்ற பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள், சிறுபான்மையினரை உள்ளடக்கிய சமூக வியூகம்.

இந்தக் களத்தில் வெறும் சாதி கணக்குகளும், காகிதக் கூட்டணிகளும் மட்டும் போதாது என்பதை உணர்ந்த சமாஜ்வாதி கட்சி, பாஜகவின் பலத்தை எதிர்கொள்ள 'சாஃப்ட் பவர்' ஆளுமையான மைன்புரி எம்.பி. டிம்பிள் யாதவை முதன்மைப்படுத்தி வருகிறது.

உத்தரப் பிரதேச வாக்காளர்களில் பாதி எண்ணிக்கையில் உள்ள பெண் வாக்காளர்களைக் கவரும் ஓர் 'அமைதிப் புயல்' ஆக பார்க்கப்படும் டிம்பிள், பாஜகமுன்வைக்கும் 'குண்டா ராஜ்' விமர்சனங்களுக்கு தன் கண்ணியமான ஆளுமையால் தக்க பதிலடி தருகிறார்.

'இண்டியா' கூட்டணியில் இருந்தாலும், உத்தரப் பிரதேசத்தில் பாஜகவை நேருக்கு நேர் எதிர்க்கும் உண்மையான பலம் சமாஜ்வாதிக்கு தான் உண்டு என்பதை, 111 சட்டமன்றத் தொகுதிகளின் வெற்றி மூலம் நிரூபித்துக் காட்டியவர் அகிலேஷ் யாதவ்.

பாஜகவின் மாபெரும் தேர்தல் நகர்வுகளை எதிர்கொள்ளச் சமாஜ்வாதி வகுத்துள்ள பிடிஏ வியூகமும், டிம்பிளின் வருகையும் உத்தரப் பிரதேசத்தில் புதிய விடியலைத் தருமா என்பது சற்று சுருக்கமாகவும் தெளிவாகவும் பார்ப்போம்.

உத்தரப் பிரதேச அரசியலில், சமாஜ்வாதி கட்சி முதன்மை எதிர்க்கட்சியாக மட்டும் இல்லை. காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு

அடுத்தபடியாக, நரேந்திர மோடி தலைமை–யிலான பாஜக அரசுக்கு மிகக் கடுமையான சவாலை விடுக்கும் தலைவர்களில் ஒருவராக அகிலேஷ் யாதவ் உருவெடுத்துள்ளார்.

கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் உத்தரப் பிரதேசத்தின் மொத்தமுள்ள 80 தொகுதிகளில் சமாஜ்வாதி 37, காங்கிரஸ் 6 என இண்டியா கூட்டணி 43 இடங்களைக் கைப்பற்றின. மாறாக என்.டி.ஏ கூட்டணி 36 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. பாஜக மத்தியில் தனிப்பெரும்பான்மையை இழக்க உத்தரப் பிரதேச தேர்தல் முடிவுகளே பிரதான காரணமாக அமைந்தன.

குறிப்பாக, அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழா நடந்த சில மாதங்களிலேயே, அயோத்தியை உள்ளடக்கிய ஃபைசாபாத் தொகுதியில் சமாஜ்வாதி பெற்ற வெற்றி, பாஜகவின் அரசியல் பிம்பத்துக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

உண்மையான பரீட்சை எப்போது?

2027–இல் வரவிருக்கும் உத்தரப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தல் அகிலேஷுக்கு மிகப் பெரிய சவாலாகும். தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் ஆட்சியில் இல்லாத ஒரு சூழலில், முதல்வர் யோகி ஆதித்யநாத் மிகவும் வலிமையான ஒரு தலைவராக உருவெடுத்துள்ளார். அதேநேரம், தற்போதைய அரசு மீதான விமர்சனங்களுக்கு என்.சி.ஆர்.பி (ழிசிஎஸிஙி) வெளியிட்ட குற்றப் புள்ளிவிவரங்கள், எதிர்க்கட்சிகளுக்குப் பெரிய ஆயுதமாக மாறியுள்ளன.

உத்தரப் பிரதேசத்தில் சமாஜ்வாதி ஆட்சி–யின்போது 2017–ம் ஆண்டில் தீவிரக் குற்றங்கள் 64,450 ஆக இருந்த நிலையில், 2024–ல் பாஜக ஆட்சியில் அது 85,647 ஆக உயர்ந்துள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்களும் சமாஜ்வாதி ஆட்சியில் 56,011–ல் இருந்து பாஜக ஆட்சியில் 66,398 ஆக அதிகரித்துள்ளன.

அதேவேளையில், பிடிஏ வியூகத்தை அகிலேஷ் மிகத் தீவிரமாகக் கட்டமைத்து வருகிறார். யாதவ் – முஸ்லிம் வாக்குகளை மட்டும் நம்பியிருக்காமல், குர்மி, பாசி போன்ற பிற சமூகங்களையும் ஒருங்கிணைத்து வருகிறது சமாஜ்வாதி கட்சி.

பூத் கமிட்டிகளை சீரமைத்தல் மற்றும் பெண்களுக்கு ஆண்டுக்கு 40,000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் 'ஸ்த்ரீ சம்மான் சம்ருத்தி யோஜனா', பெண்கள் பாதுகாப்பு போன்ற வாக்குறுதிகளுடன் சமாஜ்வாதி களமிறங்கியுள்ளது.

இருந்தபோதிலும்கூட, கடந்த கால சமாஜ்–வாதி ஆட்சிக் காலத்தின் 'சட்டம் செயல்படாச் சூழல்' (Lawlessness) என்ற பிம்பத்தை உடைப்பது அகிலேஷுக்கு மிகவும் அவசியமாகிறது. இதைத்தான் இன்றுவரை பாஜக கையில் எடுத்து அகிலேஷை முடக்குகிறது.

டிம்பிளின் வருகை எப்படியிருக்கும்?

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினருக்கு ஆதரவு, தேர்வு வினாத்தாள் கசிவு மற்றும் மாணவர்கள் விவகாரங்களில் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தது முதல், லக்னோவில் பெண்களுக்கான நலத்திட்டங்களை அறிவித்தது வரை டிம்பிள் யாதவ் தீவிரமாகச் செயல்படுகிறார். இது சமாஜ்வாதி மீது பாஜக காலம் காலமாக வைக்கும் குற்றச்சாட்டுகளின் போக்கையே முற்றிலும் மாற்றியுள்ளது.

உத்தராகண்ட் மாநிலத்தின் தாக்கூர் சமூகத்தைச் சேர்ந்த டிம்பிள், யாதவ் அல்லாத பிற சாதியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் ஆதரவும் இவருக்குக் கிடைக்கிறது. யோகி ஆதித்யநாத் அரசின் நலத்திட்டங்களால் பலனடைந்த பெண் வாக்காளர்களைத் தன் பக்கம் இழுக்க, மென்மையான அழுத்தமான 'சாஃப்ட்–பவர்' பிரச்சாரகராக டிம்பிள் இருப்பார்.

முதல்முறை வாக்காளர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பாஜக மிகுந்த செல்வாக்கு கொண்டுள்ளது. ஆனால், சமீபத்தில் நடந்த போராட்டங்கள் 'ஜென்ஸீ' (Gen Z) தலைமுறையினரின் ஒரு பிரிவினர் மத்தியில் அரசியல் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியதாகவே பார்க்கப்படுகிறது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 'அட்லஸ் 2024' வெளியீட்டின்படி, 2024-ம் ஆண்டு மே 20-ம் தேதி நிலவரப்படி, உத்தரப் பிரதேச வாக்காளர்களில் 21.19% பேர் 18 முதல் 29 வயதுக்குட்பட்டவர்கள். அதாவது, ஐந்து வாக்காளர்களில் ஒருவர் இந்த வயதினர். ஆதலால் 2027 உத்தர பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில், இளைஞர்களின் வாக்கு தீர்க்கமான அரசியல் சக்தியாக மாறக்கூடும்.

வலுவான போட்டியாளர் பாஜக

10 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் பாஜக, மத்தியில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க உத்தரப் பிரதேச தேர்தலை முன்னோட்டமாகப் பார்க்கும். மிகவும் வலிமையான அமைப்புரீதியான கட்டமைப்பு, பிரதமர் மோடியின் செல்வாக்கு, யோகி ஆதித்யநாத்தின் தனிப்பட்ட ஈர்ப்பு மற்றும் தேர்தல் கூட்டணிகள் ஆகியவை பாஜகவுக்கு மிகப் பெரிய பலமாக உள்ளன.

எனவே, 2027 தேர்தல் என்பது வெறும் அகிலேஷ் மற்றும் ஆதித்யநாத் ஆகியோருக்கு இடையிலான போட்டியாக மட்டும் இருக்காது. மாறாக, உத்தரப் பிரதேசத்தின் பெண்கள் மற்றும் இளம் வாக்காளர்களை எந்த அரசியல் பார்வை மிக நம்பகமான முறையில் சென்றடைகிறது என்பதற்கான போட்டியாக அமையும்.

இரு தரப்பினரையும் வசப்படுத்தி டிம்பிள் வெற்றிபெற்றால், மாநிலத்தின் அடுத்த முதல்வராகவும் அவர் உருவெடுத்தாலும் வியப்பில்லை என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

ஆக, 2022-ல் பாஜகவுக்கு இருந்த அசைக்க முடியாத பலம் இப்போது சற்று தளர்ந்துள்ளதை புள்ளிவிவரங்கள் உணர்த்துவதுடன், பாஜகவுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் அமைகின்றன உத்தரப் பிரதேச 2027 தேர்தல் கள நிலவரங்கள்.



தவெக, காங்கிரஸ், மதிமுக, விசிக, ஐயுஎம்எல் இணைந்து 'மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றிக் கூட்டணி'யைத் தொடங்கி உள்ளன. கூட்டணிக்குத் தலைவராக முதல்வர் விஜய் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

“மிசா கொடுமைகளை முதல்வர் விஜய் அரை மணி நேரம் தாங்குவாரா?”

கே.பாலகிருஷ்ணன்

“மிசா கொடுமைகளை அரை மணி நேரம் தாங்குவாரா?” என கேள்வி எழுப்பி, முதல்வர் விஜய்யின் பதிலுரைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் செய்தியாளர்களிடம் இன்று அவர் பேசும்போது, “இந்திய வானவியல் ஆராய்ச்சி உட்பட பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு பயன்படும் இஸ்ரோ அமைப்பை தனியாருக்கு தாரை வார்க்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்தபோது, இஸ்ரோவை தனியாருக்கு வழங்கவில்லை, ஏவப்படும் ராக்கெட்டுகளைதான் தனியார் வசம் கொடுக்க உள்ளோம் என்கிறார்கள். ராக்கெட் ஏவுவதை தனியாருக்கு வழங்கிவிட்டால், இஸ்ரோவின் பணி என்ன?

நாடாளுமன்ற கூட்டத்தில், ஒரு நாள் கூட மக்கள் பிரச்சினை மற்றும் எதிர்க்கட்சிகளின் கருத்தை கேட்டு, விவாதம் நடத்தி, பதில் சொல்லும் நிலையில் மத்திய அரசு இல்லை. 25 நாட்கள் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்தில் ஒரு நாள் கூட பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் வரவில்லை.

காய்கறி, மளிகை பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ அரிசி ரூ.35 கூடியிருக்கிறது. இது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் என்ன செய்கிறது என்று தெரியவில்லை. பதுக்கல் இருப்பதால் விலை உயர்ந்து வருவதாக வணிகர்கள் கூறுகின்றனர். பதுக்கலை ஏன் தடுக்கவில்லை. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும், மக்களை



பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை இல்லாமல் மத்திய, மாநில அரசுகள் உள்ளன.

தமிழக சட்டப்பேரவையில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஆழமாக பேசவில்லை. கஷ்டப்பட்டு விவசாயி விளைவிக்கும் நெல்லை கொள்முதல் செய்யாததால், மழையில் நனைந்து வீணாகிறது. கொள்முதல் செய்த நெல்லை கூட பாதுகாக்க முடியாத நிலையில் தமிழக அரசு உள்ளது.

மேம்போக்காக பேசினாலும், மக்கள் கேட்பார்கள் என மற்ற ஆட்சியை போன்று தவெக ஆட்சியும் இருக்கிறது. இது தொடர்பாக பேச, சட்டபேரவையில் வழி இல்லை. தனிப்பட்ட விரோதங்களை தீர்த்துக் கொள்வது போல பேசுகிறார்கள்.

உடல்மொழியில் நியாயமில்லை:

காவல்துறை மானிய கோரிக்கை மீது முதல்வர் விஜய் பதில் சொல்கிறார். எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் விமர்சனங்களுக்கு முதல்வர் நிதானமாக பதில் சொல்ல வேண்டும். கொலையை எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டதான் செய்வார்கள். அதனால் அவர்கள் மீது

பரஸ்பர பழியும், குற்றத்தையும் சுமத்துவது சரியா? இது என்ன பட்டிமன்றமா?

முதல்வர் விஜயின் உடல் மொழி நியாயமில்லை. 8 கோடி மக்களின் முதன்மை பிரதிநிதியாக உள்ள முதல்வர் விஜய்யே இப்படி பேசினால், அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏக்கள் எப்படி பேசவார்கள்? உடல்மொழி கூட பொருத்தமாக அமையவில்லை என்பது வருத்தம்.

காவல் துறை மானிய கோரிக்கையில் காவல் துறை சம்பந்தமாக பேசினால் போதும். ஊழல் குற்றச்சாட்டை பேசுவதற்கு பொதுக் கூட்டமா? ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கிறது என சட்டப்பேரவையில் கூறுவதால் என்ன பலன்? ஆதாரம் இருந்து வழக்கு தொடர்ந்து தண்டனை பெற்று கொடுக்கலாம். அமலாக்கத் துறை பதிவு செய்துள்ள வழக்குகள் அனைத்தும் உண்மை என கூற முடியாது. செந்தில் பாலாஜி மீது ஊழல் குற்றச்சாட்டு இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அமலாக்கத் துறை வழக்கை முதல்வர் விஜய் படித்து காட்ட வேண்டிய அவசியம் என்ன?

அவசர நிலை என்பது துயரமான சம்பவம். நாட்டில் அரை சர்வாதிகார ஆட்சி நடைபெற்றது. அடிப்படை உரிமைகளை பறித்தனர். யாரையும் கைது செய்யலாம் என்ற நிலை இருந்தது. சிறைச் சாலைகள் கொடூரமான அடக்குமுறை ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது.

தமிழக சிறையில் பலர் உயிரிழந்தனர். கம்யூனிஸ்ட் தலைவர்கள் கூட கடுமையான தாக்குதலுக்கு ஆளாகினர். மிசா தாக்குதலை நியாயப்படுத்துவது, தாக்குதலுக்கு உள்ளானவர்களை கொச்சைப்படுத்துவது போல் முதல்வர் விஜய் பேசுவது வன்மையான கண்டனத்துக்குரியது. அப்படியான கொடுமைகள் விஜய்க்கு நடந்தால் அரை மணி நேரம் தாங்குவாரா? இது அநாகரிகமானது. வன்மையான கண்டனத்துக்கு உரியது.

தவெக கூட்டணியில் இல்லை:

அமைதியான முறையில் மக்கள் போராட அனுமதி இல்லை. அப்படியான ஒரு மோசமான நிலை தவெக ஆட்சியிலும் நீடிக்கிறது. சட்டம் – ஒழுங்கின் பேரில் அனைவருக்கும் சமாதி கட்டுவதா?

எந்தச் சூழ்நிலையிலும் நாங்கள் அமைச்சரவையில் இடம்பெற மாட்டோம். ஒரு ஆட்சி அமையாமல் போய் விட கூடாது என்பதற்காக தவெகவுக்கு ஆதரவு அளித்தோம். தவெக கூட்டணியில் கம்யூனிஸ்ட் இல்லை. கூட்டணி தொடர்பான கூட்டத்துக்கு நாங்கள் போகபோவதில்லை. திமுக, தவெக கூட்டணியில் நாங்கள் இல்லை.

இடதுசாரிகள் இணைந்து செயல்பட ஆரம்பித்துள்ளோம். திருச்சியில் மிகப் பெரிய பேரணி நடத்த உள்ளோம்.

அமைச்சர்களிடம் கொள்கை முரண்பாடு:

தேர்தல் வரும்போது சூழலுக்கு ஏற்றார்போல் முடிவு செய்வோம். இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. யாருக்கு ஆதரவு கொடுப்பது என கலந்து பேசி முடிவு செய்வோம்.

ராகுல் காந்தி, விஜய் என யாராக இருந்தாலும், தேர்தலுக்கு முன்பாக பிரதமர் வேட்பாளரை முன்மொழிவது தவறானது. அதை ஏற்றுக் கொள்ளமாட்டோம். பாஜகவை வீழ்த்த வேண்டும் என்றால் ஓர் அணியை உருவாக்கிதான் செயல்பட வேண்டும்.

வி.பி.சிங், தேவகோடா, மன்மோகன் சிங் ஆகியோர் பிரதமர் வேட்பாளராக தேர்தலை சந்திக்கவில்லை. அதேபோல், தேர்தலுக்குப் பிறகு பிரதமரை தேர்வு செய்வதுதான் சாத்தியமானது.

தவெக அமைச்சர்களுக்குள்ளேயே கொள்கை முரண்பாடு உள்ளது. அவர்களிடம் தெளிவான புரிதல் இல்லை" என்று பாலகிருஷ்ணன் கூறினார்.

“எனது உடல்மொழியில் உள்நோக்கம் இல்லை”

முதல்வர் விஜய் விளக்கம்



முன்னதாக, நேற்று சட்டப்பேரவையில் காவல் துறை, தீயணைப்புத் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதத்தின் போது பல்வேறு கட்சியை சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள், சட்டம் – ஒழுங்கு தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு முதல்வர் விஜய் பதில் அளித்தார்.

“என்னுடைய பதிலுரையின் இடையேயான எனது உடல்மொழி எதேச்சையாக வெளிப்பட்டதுதானே தவிர, அது எவ்வகையிலும் உள்நோக்கம் கொண்டதில்லை” என தமிழக முதல்வர் விஜய் விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கப் பதிவில், “சட்டமன்றத்தில் 7.9.2026 அன்று காவல் துறை மானிய கோரிக்கையில், என்னுடைய பதிலுரையின் இடையேயான எனது உடல்மொழி எதேச்சையாக வெளிப்பட்டதுதானே தவிர, அது எவ்வகையிலும் உள்நோக்கம் கொண்டதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, தனிப்பட்ட முறையில் யார் மனதையும் புண்படுத்துகிற செயலாக அதை அர்த்தம் கொள்ள வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் பதிலுரையின் போது திமுக மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். சர்க்காரியா கமிஷனின் அறிக்கை, கட்சி நிதி தொடர்பான அமலாக்கத் துறை அறிக்கையைக் குறிப்பிட்டுப் பேசினார்.

கூடவே, “எதற்கெடுத்தாலும் மிசா, மிசாவைப் பார்த்தவர்கள் என்று பேசுகிறார்கள். மிசாவைப் பற்றிய வரலாறு எல்லோருக்கும் தெரியும்” என்று பேசுகையில் தனது தாடையத் தட்டினார். அந்த உடல்மொழிக்கு திமுக கடும் கண்டனம் தெரிவித்தது.

பொது வெளியிலும் முதல்வரின் உடல் மொழி தொடர்பாக பல்வேறு விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. உருவக் கேலிக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

“அவசரநிலை காலத்தில் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் காவல் துறையால் கடுமையாக தாக்கப்பட்டு அவரது தாடை உடைக்கப்பட்டது. உருவக் கேலி செய்யும் விதமாக பேசுவது யாராக இருந்தாலும்

கண்டனத்திற்குரியது. அதை முதலமைச்சரே செய்திருப்பது பொறுப்பற்ற செயலாகும்" என தவெகவுக்கு ஆதரவளித்துள்ள மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கண்டனம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சட்டப்பேரவையில் இன்று பேசிய திமுக கொறடா எ.வ.வேலு, "சட்டப்பேரவைக்கு என்று மரபுகள் உள்ளன. அதன்படி, முதல்வர் கண்ணியமாகவே பேசுவார். ஆனால், முதல்வர் விஜய் அவை மரபை மீறி முதல்வர் பேசி இருக்கிறார்." என்று கூறியதோடு, முதல்வரின் பேச்சை அவைக் குறிப்பில் இருந்து நீக்கக் கோரினார்.

ஆனால், முதல்வர் பேச்சை நீக்கத் தேவையில்லை என்று சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் கூறினார். இதனையடுத்து திமுகவினர் அமளியில் ஈடுபட, அவைக் காவலர்கள் திமுகவினரை குண்டுக்கட்டாக வெளியேற்றினர்.

இந்தச் சூழலில், "என்னுடைய பதிலுரையின் இடையேயான எனது உடல்மொழி எதேச்சையாக வெளிப்பட்டதுதானே தவிர, அது எவ்வகையிலும் உள்நோக்கம் கொண்டதில்லை" என தமிழக முதல்வர் விஜய் விளக்கம் அளித்துள்ளார்.

27 ஐஏஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

வருவாய் நிர்வாக ஆணையர் முருகானந்தம், பள்ளிக்கல்வித்துறை செயலர் சந்திரமோகன் உட்பட 27 ஐஏஎஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளனர்.

இதுகுறித்த உத்தரவை தலைமைச்செயலர் சாய்குமார் வெளியிட்டுள்ளார். அதன்படி, டான்சி தலைவராக இருந்த தர்மேந்திர பிரதாப் யாதவ், ஊரக வளர்ச்சித்துறை செயலராகவும், பள்ளிக்கல்வித்துறை செயலர் பி.சந்திரமோகன் வருவாய் நிர்வாக ஆணையராகவும், அப்பதவியில் இருந்த நா.முருகானந்தம் டான்சி தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோ–ஆப்டெக்ஸ் மேலாண் இயக்குநராக இருந்த ஜெ.இன்னசன்ட்திவ்யா, பள்ளிக்கல்வி செயலராக நியமிக்கப்பட்டுள்ளளார்.

இதுதவிர பெரம்பலூர் ஆட்சியர் ஷரண்யா அரி விருதுநகர் ஆட்சியராகவும், பொன்னேரி சரக சார் ஆட்சியர் எப்.அப்துல் ரஷிக், பெரம்பலூர் ஆட்சியராகவும், செங்கல்பட்டு சரக சார் ஆட்சியர் வி.நல்ல சிவம், திருப்பூர் ஆட்சியராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எம்டிசி மேலாண் இயக்குநராக இருந்த டி.மோகன், உள்துறை கூடுதல் செயலராகவும், சுற்றுலாத்துறை இயக்குநர் வி.பி.ஜெயசீலன் எம்டிசி மேலாண் இயக்குநராகவும், டாமின் மேலாண் இயக்குநர் சரவண வேல்ராஜ், எழுதுபொருள் அச்சகத்துறை ஆணையராகவும், ஆவின் மேலாண் இயக்குநர் அஜய்யாதவ், உணவுப்பொருள் வழங்கல் ஆணையராகவும், உணவுப்பொருள் வழங்கல் இயக்குநராக இருந்த சிவராசு, ஆவின் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கைத்தறித்துறை செயலர் டி.என். வெங்கடேஷ், டுபிட்கோ மேலாண் இயக்குநராகவும், தாட்கோ மேலாண் இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி, டாமின் மேலாண் இயக்குநராகவும், டுபிட்கோ மேலாண் இயக்குநர் கவிதா ராமு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழக மேலாண் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் உட்பட 27 ஐஏஎஸ் அதிகாரிகள் தமிழகம் முழுவதும் மாற்றப்பட்டுள்ளனர்.

உணவில் உப்பின் அளவை குறைக்க விழிப்புணர்வு சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ் தகவல்

சட்டப்பேரவையில் சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ், 2 புதிய அறி–விப்புகளை வெளியிட்டு பேசியதாவது: தமிழகத்தில் உயர் ரத்த அழுத்தம், இதய நோய், பக்கவாதம், சிறுநீரக நோய் போன்ற தொற்றா நோய்கள் மிக முக்கியமான பொது சுகாதாரப் பிரச்சினையாக உள்ளன, மருத்துவச் சான்றளிக்கப்பட்ட இறப்புகளில் 50 சதவீதம் இதயம் மற்றும் ரத்தக் குழாய் நோய்களால் நிகழ்கிறது.

1.8 கோடி மக்கள் உயர் ரத்த அழுத்தநோயுடன் வாழ்கின்றனர். இந்த நோய்களுக்கு பல்வேறு காரணிகள் இருந்தாலும், நாம் உட்கொள்ளும் உப்பின் அளவு முக்கியப் பங்கு வகிக்கிறது.

உலக சுகாதார நிறுவனம், ஒருவர் ஒரு நாளைக்கு 5 கிராமுக்கும் குறைவாகவே உப்பு உட்கொள்ள வேண்டும் என பரிந்துரைக்கிறது. ஆனால், ஆய்வுகளின்படி, தமிழக மக்கள் சராசரியாக ஒரு நாளைக்கு 7 முதல் 8 கிராம் வரை உப்பு உட்கொள்கின்றனர்.

இதில் 88 சதவீதம், வீட்டுச் சமையலின்போது சேர்க்கப்படும் உப்பிலிருந்தே வருகிறது. ஒரு நாளைக்கு வெறும் 1 கிராம் உப்பு குறைந்தாலும், ரத்த அழுத்தம் கணிசமாகக் குறைந்து, இதய நோய் இறப்புகளில் 7 சதவீதமும், பக்கவாத இறப்புகளில் 10 சதவீதமும் குறையும்.

மேலும், சோடியம் குறைந்த மாற்று உப்பு பயன்படுத்திய சுமார் 21 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில், பக்கவாதம் 14 சதவீதமும், மொத்த இறப்புகள் 12 சதவீதமும் குறைந்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அதிக உப்பு உட்கொள்ளலைக் குறைப்பதற்கான ஒருங்கிணைந்த மாநில உத்தி ஒன்றை உருவாக்கி செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, மக்களின் தற்போதைய உப்பு உட்கொள்ளல் அளவைக்

கண்டறிய, சிறுநீர் மாதிரி அடிப்படை–யிலான மாநில அளவிலான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

சுவையில் வேறுபாடு தெரியாத சோடியம் குறைந்த மாற்று உப்பை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்படும். உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு உப்பு குறைப்பு குறித்த முறையான ஆலோசனை, சமூக சுகாதாரப் பணியாளர்கள் மூலம் வீடு தேடி வழங்கப்படும்.

ஊறுகாய், அப்பளம், கருவாடு, பதப்படுத்தப்பட்ட உணவுகள் போன்றவற்றில் மறைந்துள்ள உப்பு, வீட்டுச் சமையலில் அதிக உப்பு பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைக்கும் எளிய வழிமுறைகள் குறித்து மாநிலம் தழுவிய விழிப்புணர்வு இயக்கம் மேற்கொள்ளப்படும்.

டெங்கு நோய் பாதிப்பு அதிகம் உள்ள ஒரு மாவட்டத்தில் சில வார்டுகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த ஆய்வில், உடலில் தடவும் கொசு விரட்டி, எலுமிச்சை யூகலிப்டஸ் எண்ணெய் போன்ற இயற்கை கொசு விரட்டி மற்றும் மின்சார கொசு விரட்டி ஆகியவற்றின் மூலம் டெங்கு நோய் பரப்பும் ஏடிஎஸ் கொசுக்கடியிலிருந்து கூடுதல் பாதுகாப்பு பெற முடியுமா மற்றும் இதனால் பக்க விளைவுகள் ஏதும் ஏற்படுமா என்பது பற்றி கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அறிவியல் ஆதாரங்கள் திரட்டப்பட்டு அதன் அடிப்படையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இவ்வாறு அவர் பேசினார்.

சட்டப்பேரவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு

பேரவைத்தலைவர் ஜேசிடி பிரபாகர் அறிவிப்பு

சட்டப்பேரவை மீண்டும் கூடும் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படுவதாக பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர் அறிவித்தார்.

தமிழகத்தில் அமைந்த 17–வது சட்டப்பேரவையின் முதல் பட்ஜெட் மற்றும் மானிய கோரிக்கைக்கான கூட்டத்தொடர், ஆக.5–ம் தேதி தொடங்கியது. அன்று பொது நிதிநிலை அறிக்கையும், 6–ம் தேதி வேளாண் நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டன.

ஆக.5–ம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி, அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து பேரவையில் ஆக.12–ம் தேதி வரை நிதி–நிலை அறிக்கைகள் மீதான விவாதம் நடைபெற்று, அதைத்தொடர்ந்து, துறைகள்தோறும் மானியக் கோரிக்கை மீதான விவாதம் ஆக.17–ம் தேதி தொடங்கியது.

அன்று முதல் சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து மற்ற நாட்களில் காலை முதல் மாலை வரை தொடர்ந்து துறைகள்தோறும் விவாதங்கள், அமைச்சர்கள் பதிலுரைகள் நடைபெற்றன. விவாதத்தின் இடையே நிதி ஒதுக்கச்சட்ட மசோதா உள்பட 11 சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் அமைச்சர்கள் பதிலுரை அளித்தனர். அதைத் தொடர்ந்து பேரவை நிகழ்வுகள் குறித்த அறிக்கையை பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர் வாசித்தார். தொடர்ந்து, பேரவை மீண்டும் கூடும் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைப்பதற்கான தீர்மானத்தை அவை முன்னவர் கே.ஏ.செங்கோட்டையன் முன்மொழிந்தார்.

இதையடுத்து, பேரவை மீண்டும் கூடும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவதாக பேரவைத்தலைவர் ஜேசிடி.பிரபாகர் அறிவித்தார்.

சட்டப்பேரவை கூட்டத் தொடரில் ஆளுநர்



உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், பட்ஜெட் மீதான பொது விவாதம் மற்றும் மானியக் கோரிக்கை விவாதங்களில் ஆளுங்கட்சியை விட எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுவதற்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டதாக பேரவைத் தலைவர் அறி–வித்துள்ளார்.

பார்வையாளர் வருகை தொடர்பாக பேரவை தலைவர் ஜேசிடி.பிரபாகர் பேசும்போது, "கடந்த 2021–ம் ஆண்டு 22,651 பேரும், 2023–ல் 21,130 பேரும், 2024–ல் 10,754 பேரும், 2025–ம் ஆண்டு 20,123 பேரும் பேரவை நிகழ்வுகளை பார்வையிட்டுள்ளனர். ஆனால், இந்த ஆண்டு கடந்த 28 நாட்களில் மட்டும் 32,055 பேர் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை பார்வையிட்டிருக்கிறார்கள். சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டாலும், நிகழ்வுகளை நேரில் காண வேண்டும் என்ற ஆர்வம் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

விடுமுறை எடுத்துக்கொண்டு கூட பேரவையை காண வந்துள்ளனர். பொதுவாழ்வில் ஈடுபட வேண்டும் என்ற மிகப்பெரிய ஆர்வம் இளைஞர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதையே இது காட்டுகிறது" என்றார்.

மதுராந்தகத்தில் இ.பரந்தாமன், தாராபுரத்தில் எஸ்.சுகன்யா: வேட்பாளர்களை அறிவித்தது திமுக



மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அக்டோபர் 6-ம் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள நிலையில் அத்தொகுதிகளுக்கான வேட்பாளர்களை திமுக அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வருகிற 06-10-2026 அன்று நடைபெற உள்ள மதுராந்தகம் (தனி) சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் ஆதரவுடன் திமுக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் ஐ.பரந்தாமன், தாராபுரம் (தனி) சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில்மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் ஆதரவுடன் வழக்கறிஞர் எஸ். சுகன்யா ஆகியோர் திமுக சார்பில் போட்டியிடுவார்கள்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைத் தேர்தலில் திமுக போட்டியிடுவது குறித்து உதயநிதி ஸ்டாலின், டி.ஆர்.பாலு, கே.என்.நேரு, கனிமொழி உள்ளிட்ட நிர்வாகிகளுடன் நடத்திய ஆலோசனைக்குப் பிறகு திமுக தலைவர் ஸ்டாலின் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறது. இடைத் தேர்தல் வேட்புமனு தொடங்கிய நாளிலேயே திமுக வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் சூழல் காரணமாக அதிமுகவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தனர்.

அதிமுக எம்எல்ஏ-க்களாக தேர்ந்தெடுக்கப் பட்ட மதுராந்தகம் மரகதம் குமரவேல், தாராபுரம் சத்தியபாமா, பெருந்துறை ஜெயக்குமார், அம்பாச முத்திரம் இசக்கி சுப்பையா, விராலிமலை சி.விஜய பாஸ்கர், கரூர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் தங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினமா செய்வதாக சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகரிடம் கடிதம் கொடுத்துவிட்டு தவெகவில் இணைந்தனர். இவர்களின் ராஜினாமாவை பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் ஏற்றுக் கொண்டதையடுத்து அந்த தொகுதிகள் காலி யானதாக அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் இன்று அறிவிக்கப்பட்டது.

இரண்டு தொகுதிகளிலும் அதிமுக வேட்பாளர்களே வெற்றி பெற்று இருந்ததால் இடைத்தேர்தலில் அதிமுக களமிறங்குகிறது. அதனால் ஆளும் தவெக, திமுக, அதிமுக ஒருவேளை நாதகவும் போட்டியிட்டால் இத்தொகுதியில் 4 முனைப் போட்டி நிலவக்கூடும்.

தவெக ஆட்சிக்கு வந்த பின்னர் நடைபெறும் முதல் இடைத்தேர்தல் இதுவென்பதால் தவெகவும் கூடுதல் சிரத்தையோடு வெற்றியை உறுதி செய்து நாற்காலியை இன்னும் வலுப்படுத்திக் கொள்ள விழையும் என்பதில் சந்தேகமில்லை என்கின்றனர் நிபுணர்கள்.

“மிசாவில் ஸ்டாலின் கைது செய்யப்பட்டதாக எந்தக் குறிப்பும் இல்லை”

பேரவையில் நிர்மல் குமார் பேச்சு



“பெண்கள் குறித்து அவதூறாக பேசியதால்தான் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் என்றுதான் குறிப்புகள் உள்ளதே தவிர, மிசா சட்டத்தில் தான் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் என எந்தக் குறிப்பிலும் கிடையாது” என்று சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்தார்.

இன்று சட்டப்பேரவையில் பேசிய அமைச்சர் நிர்மல் குமார், “சட்டப்பேரவையில் முதல்வர் விஜய், நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை அளித்த ஆதாரங்கள் குறித்துதான் பேசினார். அவர் விசாரணையை பற்றியோ, நீதிமன்றத்தை பற்றியோ எதுவும் பேசவில்லை. சர்க்காரியா கமிஷன் பற்றி ஏற்கெனவே இந்த அவை–யிலேயே உள்ளது, அதுபற்றி தானே அவர் பேசினார்.

பூச்சிக்கொல்லி மருந்து தெளித்ததில் 25 ஆயிரம் ரூபாய் அப்போதைய முதல்வர் கருணாநிதி, தன் செயலாளர் மூலமாக வாங்கியது. அடுத்ததாக ரூ.25 ஆயிரம் வாங்கியது என அனைத்தும் சர்க்காரியா கமிஷனில் உள்ளது. எங்கெங்கெல்லாம் கருணாநிதி பணம் வாங்கினாரோ அது அனைத்தும் சர்க்காரியா கமிஷனில் உள்ளது.

சர்க்காரியா கமிஷனில் உள்ளதைத்தான் முதல்வர் பேசினார், இதில் ஒளிவு மறைவு ஏதும் இல்லை. கொடுக்கப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளில் 6 குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் உள்ளதாக சர்க்காரியா கமிஷன் சொன்னது. அதன் அடிப்படையில் தான் சிபிஐ வழக்குப் பதிவு செய்தது.

மிசா காலங்களில் திருட்டு வழக்கு, வழிப்பறி வழக்கு, பெண்கள் குறித்த வழக்குகளில் கூட யாரையும் கைது செய்யலாம். எனவே அப்போது கைதான எல்லோரையும் மிசாவில் கைது செய்ததாக கருத முடியாது.

20 அம்ச திட்டத்தை அறிவித்த அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி குறித்து, ‘21 அம்ச திட்டம்’ என்று அவதூறாக பேசியவர்தான் மு.க.ஸ்டாலின். இதுபோன்ற விஷயங்களின் அடிப்படையில் தான் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார்.


பெண்கள்குறித்துஅவதூறாகபேசியதால்தான் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் என்றுதான் குறிப்புகள் உள்ளதே தவிர, மிசா சட்டத்தில் தான் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் என எந்தக் குறிப்பிலும் கிடையாது. இரா. செழியன் மொழிபெயர்த்த புத்தகத்திலும் இது குறித்த குறிப்பு கிடையாது. அன்று ஸ்டாலின் செய்ததையே இப்போது எதிர்க்கட்சித் தலைவரும் செய்கிறார். ஆபாச நதியாக பேசுவதை அவர்கள் குறைத்துக்கொள்ள வேண்டும்” என்றார்.

மிசாவா கசமுசாவா

"பெண்கள் குறித்து அவதூறாக பேசியதால்தான் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் என்றுதான் குறிப்புகள் உள்ளதே தவிர, மிசா சட்டத்தில் தான் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் என எந்தக் குறிப்பிலும் கிடையாது" என்று சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்தார்.

தற்போது இந்த இந்த கருத்து சமூக வலைதளங்களில் மிசாவா கசமுசாவா என பரபரப்பாக விவாதங்கள் போய் கொண்டிருக்கிறது.

மிசாவா? இல்ல கசமுசாவா? எனக்கு உண்மை தெரிஞ்சாகனும்| என ஓமாம்புலியூர் ஜெயராமன் உள்பட பலர் பேஸ்புக், ட்விட்டர் என சமூக வலைதளங்களில் பரபரப்பாக பதவியேற்றம் செய்துகொண்டிருக்கிறார்கள்.



சமூகவலைதளத்தில் திமுகாவால் பதிவேற்றம் செய்யப்பட்ட படம்

அரசு பார்த்த சட்டசபை

கலக்கியது யார்? கலங்கியது யார்?

பிரிண்ட் அவுட் எடுத்து வந்து படிக்க 3 நாட்கள் எதற்கு? முதல்வர் விஜய்க்கு உதயநிதி ஸ்டாலின் கேள்வி..

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், முதலமைச்சர் ஜோசப் விஜய் பதிலுரை ஆற்றினார்.

அப்போது, திமுக மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து முதலமைச்சர் விஜய்சரமாரியாகப்பேசியிருந்தார். குறிப்பாக, திமுக ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பான விவகாரங்கள் குறித்தும், அமலாக்கத்துறை முன்வைத்ததாகக் கூறப்படும் பல்வேறு குற்றச்சாட்டுகள் குறித்தும் அவர் சட்டப்பேரவையில் பேசியிருந்தார்.



திமுக மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டு:

அப்போது பேசிய முதலமைச்சர் விஜய், 'திமுகவின் மூத்த உறுப்பினர் ஒருவர் பேசும்போது, மக்கள் தங்கள் கட்சிக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக மக்களுக்கு நல்லது நடக்காது எனக் கூறியுள்ளார். இத்தனை ஆண்டுகளாக வாக்களித்த மக்களைப் பார்த்து எப்படி இவ்வாறு பேச முடியும்? மக்கள் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் எதற்காக அரசியலில் இருக்க வேண்டும்?' என கேள்வி எழுப்பியிருந்தார். மேலும், 'நாங்கள் ஊழல் கோப்புகளைத் திறப்போம் என்று சொன்னதும் ஆதாரம் கேட்டார்கள். அதற்காக சில முக்கிய தகவல்களை மட்டும் இங்கு எடுத்துச் சொல்கிறேன். ரூ.16 கோடி மதிப்பிலான டெண்டருக்கு 2.5 சதவீதம் கமிஷனாக ரூ.40 லட்சம் கேட்கப்பட்டதாகவும், 1970 முதல் 1974ஆம் ஆண்டு வரை 7 தவணைகளில் ரூ.29 லட்சம் கையூட்டாகப்



பெறப்பட்டதாகவும்' பல்வேறு சம்பவங்களைச் சுட்டிக்காட்டி முதலமைச்சர் விஜய் பேசி–யிருந்தார்.

தவணை முறையில் கையூட்டு பெற்ற வரலாறு திமுகவிற்கே சேரும்:

'தவணை முறையில் கடனை அடைப்பது போல கையூட்டு பெற்ற வரலாறு இது. இதையெல்லாம் நாங்கள் கூறவில்லை. அரசால் அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் அறிக்கையிலேயே சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது' என்றும் முதலமைச்சர் விஜய் தெரிவித்திருந்தார்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் முதல்வர் விஜய்:

இந்த நிலையில், முதலமைச்சர் விஜய்யின் பதிலுரைக்கு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிலளித்துள்ளார். செய்தியாளர்களைச் சந்தித்த அவர், சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஆற்றிய 45 நிமிட பதிலுரையில் முதல் 15 நிமிடங்கள் மட்டுமே காவல்துறை நடவடிக்கைகள் குறித்து பேசப்பட்டதாகவும், அதன் பின்னர் திமுக மீது ஆதாரமற்ற பொதுவான குற்றச்சாட்டுகளை முன்வைக்கத் தொடங்கியதாகவும் விமர்சித்தார். மேலும் பேசிய உதயநிதி ஸ்டாலின், 'மூன்று நாட்களாக உட்கார்ந்து மனப்பாடம் செய்து வந்து, சினிமா கூட்டிங்கில் பேசுவது போல் பஞ்ச் டயலாக்குகளையும், ரூல்ஸுக்கான ஆக்டிங்கையும் சட்டப்பேரவையில் செய்துள்ளார். நாங்கள் கேட்ட எந்த ஒரு சட்டம்–ஒழுங்கு கேள்விக்கும் அல்லது போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் அவர் எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை' என குற்றம்சாட்டினார்.

'பிரிண்ட் அவுட் எடுத்து வந்து படிக்க 3 நாட்கள் எதற்கு?'

இதனிடையே, உதயநிதி ஸ்டாலின் தனது அதிகாரப்பூர்வ சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'அமலாக்கத்துறை குற்றச்சாட்டுகளை பிரிண்ட் அவுட் எடுத்து வந்து படிக்க 3 நாட்கள் எதற்கு?' என கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், 'பதிலற்ற பதிலுரை, பழிபோடும் பேச்சு, டைவர்ஷன் டாபிக்ஸ். மொத்தத்தில் எந்த பிரிபரேஷனும் இல்லாமல் 'ரோல், கேமரா, ஆக்ஷன்' மோடில் கிரிஞ்ச் டயலாக் பேசியிருக்கிறார். டம்மி சி.எம்., எதிர்க்கட்சியின் பதிலைக் கேட்கப் பயந்து மீண்டும் ஒளியாமல், அடுத்த முறை நன்றாகத் தயார் படுத்திக்கொண்டு வர வேண்டும்' என உதயநிதி ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துள்ளார்.

பிரபஞ்ச அறக்கட்டளை
UNIVERSAL TRUST



அனிபுடையீர் வணக்கம்,

நம்முடைய பிரபஞ்ச அறக்கட்டளையானது 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசில் பதிவு செய்யப்பட்டு 80G 12A அங்கீகாரம்பெற்று இன்று வரை சிறப்பாக செயல்பட்டுவருகிறது. நம்முடைய பிரபஞ்ச அறக்கட்டளையின் பாராட்டத்தக்க செயல்பாடுகள் சிலவற்றை காணலாம்.

நமது பிரபஞ்ச அறக்கட்டளையானது 16 மாற்றுத்திறனாளிகளை முழுமையாக தத்தெடுத்து அவர்களுக்கு தேவையான உணவு உடை மருத்துவ வசதிகளை செய்து தருகிறது. மேலும் மூன்று சக்கர வாகன வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

அனாதை குழந்தைகள் இல்லம் மூன்றிற்கு முழுமையான ஆதரவை நமது பிரபஞ்ச அறக்கட்டளை வழங்கி வருகிறது. மளிகைப்பொருட்கள் உடைகள் மற்றும் பொருளாதார உதவிகளும் தொடர்ச்சியாக நிறைவாக வழங்கப் பட்டு வருகிறது.

நம்முடைய பிரபஞ்ச அறக்கட்டளை மூலமாக வருடத்திற்கு மூன்று முறை 500 ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் வேஷ்டி, புடவைகள் தாராளமாக வழங்கப்பட்டு வருகிறது.

சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையுடன் நம்முடைய பிரபஞ்ச அறக்கட்டளை இணைந்து மாபெரும் கண் மருத்துவ முகாம்களை தொடர்ச்சியாக நடத்தி வருகிறது. இதில் ஏழை எளிய மக்களின் பார்வைகுறைபாடுகள் சரிசெய்யப்படுவதோடு தேவைப்படுபவர்களுக்கு இலவச கண்ணாடி வழங்கப்பட்டு வருகிறது.

மழைக்காலங்கள் மற்றும் பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்காக இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றது. இதில் பிரபல மருத்துவமனைகளை சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டு மக்களுக்கு தரமான சிகிச்சைகளை அளித்து வருகின்றனர்.

இது போன்ற எண்ணற்ற மக்கள் நலத்திட்ட பணிகளை நமது பிரபஞ்ச அறக்கட்டளை முன்னெடுத்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

பிரபஞ்ச அறக்கட்டளையின் மக்கள் நலப்பணிகளை விரிவுபடுத்தி அதிக பயனாளிகளுக்கு நிறைவாக உதவும் நோக்கில் நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. சிறு துளி பெருவெள்ளம் என்பதைப்போல் இயன்றவர்கள் அனைவரும் தங்கள் பங்களிப்பை பிரபஞ்ச அறக்கட்டளை வழங்கி கரங்களை வலுப்படுத்த அன்புடன் வேண்டுகிறோம்.

பிரபஞ்ச அறக்கட்டளை சார்பாக இலவச கண்சிகிச்சை மற்றும் இலவச கண் கண்ணாடி வழங்கும் முகாம்













“பிரபஞ்ச அறக்கட்டளை”
“போற்றத்தக்க சிறப்பம்சங்கள்”

சாதாரணபெண்ணாக பிறந்து வளர்ந்து, பல்வேறு சோதனைகள் இடர்பாடுகளைக் கடந்து, தற்போது சாதனை பெண்ணாக வாழ்ந்து வரும் சிங்கபெண் சுபத்ரா தேவி அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்து உதயமானதுதான் “பிரபஞ்ச அறக்கட்டளை “

2022 ஆம் ஆண்டு முதல், 2026 ஆம் ஆண்டு வரை குறுகிய காலமே என்றாலும், ஏழை எளிய ஆதரவற்ற மக்களுக்கு தொண்டாற்றுவதில் நிறைவான சேவைகளை தொடந்து வழங்கி வருவது பிரபஞ்ச அறக்கட்டளை என்றால் அது மிகையாகாது!

பிரபஞ்ச அறக்கட்டளையின் சார்பில் சென்னையின் முன்னணி மருத்துவமனைகளின், தரமான மருத்துவர்களைக் கொண்டு நடத்தப்படும் மருத்துவ முகாம்களில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பான மருத்துவ சேவைகளை பெற்றுள்ளனர்! கடைக்கோடி மனிதனுக்கும் தரமான மருத்துவ சிகிச்சைகள் இலவசமாக கிடைக்க வேண்டும் என்பதில் பிரபஞ்ச அறக்கட்டளை அக்கறை கொண்டுள்ளது!

தானத்தில் சிறந்த தானம் ரத்த தானம் என்ற கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் பிரபஞ்ச அறக்கட்டளை சார்பில் ரத்ததானம் முகாம்கள் நடைபெற்று வருகின்றன. தன்னார்வலர்கள் மற்றும் தன்னலமற்ற இளைஞர்கள், கல்லூரி மாணவ மாணவியர்கள் இந்த ரத்ததான முகாம்களில் பங்கேற்று குருதிக்கொடை அளித்து வருகின்றனர். உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கு எவ்வித தாமதமும் இன்றி ரத்தம் கிடைக்க வேண்டும் என்பதில் பிரபஞ்ச அறக்கட்டளை உறுதியாக உள்ளது!


தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான், போன்ற பண்டிகை நாட்களிலும் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் போன்ற நாட்டுப் பற்றான நாட்களிலும் ஆதரவற்றோர்கள், வயதானவர்கள் , ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன, ஆயிரக்கணக்கானோர் இது போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர் என்பது பிரபஞ்ச அறக்கட்டளையின் சமூக அக்கறைக்கு சான்றாக அமைந்துள்ளது! மேலும் இது போன்ற நலத்திட்ட உதவி வழங்கும்

தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான், போன்ற பண்டிகை நாட்களிலும் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் போன்ற நாட்டுப் பற்றான நாட்களிலும் ஆதரவற்றோர்கள், வயதானவர்கள் , ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

விழாவில் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது!

சமூகத்தில் மிகவும் பின்தங்கிய குடும்பங்களில் உள்ள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக பிரபஞ்ச அறக்கட்டளையின் சார்பில் ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகின்றது. நூற்றுக்கணக்கான நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர் இக்கல்வி உதவித் தொகையின் மூலம் பயனடைந்து வருகின்றனர். பண உதவி கிடைக்காமல் எந்த ஒரு மாணவரின் கல்வி தடைபட்டு விடக்கூடாது என்பதில் பிரபஞ்ச அறக்கட்டளை கவனமுடன் செயல்பட்டு வருகிறது!

தனி ஒரு மனிதன் விதைத்த விதையானது , இன்று பிரபஞ்ச அறக்கட்டளை என்னும் ஆலமரமாக, கம்பீரமாக மக்கள் தொண்டாற்றி வருகிறது என்பதை யாராலும் மறுக்க இயலாது. தொடர்ந்து நம்முடைய பிரபஞ்ச அறக்கட்டளையின் சிறப்பான செயல்பாட்டிற்கு ஆதரவளிக்க புரவலர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்களின் ஆதரவோடு இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதே நம் விருப்பம்!



பிரபஞ்ச அறக்கட்டளை நிறுவனர் சுபத்ரா தேவி

R.DIS No:330/2015 JOURNALIST VOICE- TAMIL MONTHLY TNTAM TC NO:22365 RNI TNTAM/2015/65996

SELQ

Buy • Sell • Discover


India's All-in-One Marketplace App

BUY ANYTHING.
SELL ANYTHING.
DISCOVER MORE!

EVERYTHING NEAR YOU!

Products | Services | Jobs | Properties | Vehicles and More... *All in One Place!*

PRODUCTS Buy & Sell
SERVICES Find Experts
JOBS New Opportunities
VEHICLES Cars, Bikes & More
PROPERTIES Homes & Lands
LOCAL BIZ Grow Together



POST • SEARCH • CONNECT • BUY • SELL
ANYTIME, ANYWHERE!

TRUSTED COMMUNITY | LOCAL LISTINGS | FAST & EASY | MILLIONS OF USERS | MOBILE FIRST

Scan to Download SELQ App

SELQ Buy • Sell • Discover

DOWNLOAD SELQ APP

India's All-in-One Marketplace

GET IT ON Google Play

Download on the App Store

- INNOVATION DRIVEN — Creating smart solutions for a better tomorrow.
- TRUSTED SERVICES — Delivering reliability and excellence you can trust.
- COMMITTED TO EXCELLENCE — Striving for the highest standards in everything we do.
- BUILDING A BETTER TOMORROW — Empowering communities and shaping a brighter future.

POWERED BY
INSHAH GROUP OF COMPANIES

INNOVATE • INTEGRATE • INSPIRE

A diversified group committed to delivering innovative solutions and trusted services across multiple industries.

LAKHS OF SATISFIED CUSTOMERS | PAN INDIA PRESENCE & GROWING | COMMITMENT QUALITY - TRUST INNOVATION

OWNED AND PUBLISHED R.ANANDAN. NO.19, Rathrappa Street Choolai Chennai - 600 112.
Printed By him at SEAMAN GRAPHICS NO.65, Chellappa Street. Otteri. Chennai -12. Editor: R.ANANDAN.